# சென்னை காலநிலை செயல்திட்ட கையேடு வெளியீடு



காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சென்னைக்கான முதல் காலநிலை செயல் திட்ட கையேட்டை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் துறையின் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சென்னை மேயர் ஆர்.பிரியா, தலைமைச் செயலர் வெ.இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை கூடுதல் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல் மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாகு, சி40 நகர ஆலோசகர் பெஞ்சமின் மேத்யூஸ், நகர மேலாண்மை மையம் – அகமதாபாத் இயக்குநர் மன்விதா பராடி.

**சென்னை, ஜூன் 13:** வரும் 2050-ஆம் ஆண்டுக்குள் சென்னையில் கார்பன் சமன்பாட்டை எட்ட வகை செய்யும் காலநிலை செயல் திட்ட கையேட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இதற்கான நிகழ்ச்சி, சென்னை தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சென்னை காலநிலை செயல் திட்டம் தமிழ்நாடு மாநில காலநிலை மாற்றம் குறித்த செயல்திட்டத்துடன் ஒன்றி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த செயல் திட்டத்தின்படி, கார்பன் உமிழ்வை 2050-ஆம் ஆண்டில் பூஜ்ஜிய நிலையை அடைய வழி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையை அடைய பல்வேறு செயல்பாடுகளை ஊக்குவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, 2050-ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தில் இருந்து 93 சதவீத மின்சாரத்தை அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சென்னையில்உள்ள அனைத்து வணிகக் கட்டடங்களிலும் அதிக திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலை பயன்படுத்துவது, மாநகரப் போக்குவரத்துக் கழக பேருந்துகளை 100 சதவீதம் மின்மயமாக்குவது உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளை ஊக்குவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயல்பாடுகளின் மூலமாக 2050-ஆம் ஆண்டுக்குள் கார்பன் சமன்பாட்டை எட்ட சென்னை காலநிலை செயல் திட்ட கையேட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS

# சென்னை போலீஸாருக்கு கையடக்க கணினி



காவல் ரோந்துப்பணியை நவீனப்படுத்தும் திட்டமாக 'மின்னணு ரோந்து முறையை செயல்படுத்தும் ஸ்மார்ட் காவலர் எனும் திட்டத்தை தொடங்கிவைத்து கையடக்கக் கணினிகளை வழங்கிய சென்னை பெருநகரக் காவல் ஆணையர் சங்கர் ஜிவால். உடன் கூடுதல் ஆணையர்கள் பிரேம் ஆனந்த் சின்ஹா, ஜெ.லோகநாதன், இணை ஆணையர் பி.சாமுண்டீஸ்வரி.

**சென்னை,ஜூன் 13:** சென்னை காவல்துறையில் போலீஸாருக்கு 408 கையடக்க கணினி வழங்கப் பட்டது.

சென்னை பெருநகர காவல்துறையில் போலீஸாருக்கு ரூ.1.12 கோடியில் 408 கையடக்க கணினி (Tablets) வாங்கப்பட்டது. இந்த கணினியில் ஸ்மார்ட் காவலர் செயலி (Smart Kaavalar App) மூலம் ரோந்து பணிகளின் போது, காவலர் பணியில் இருக்குமிடம் (கர்புரீஹற்ண்ர்ய்), முக அடையாளத்தை வைத்து குற்றவாளிகளை அடையாளம் காண உதவும் செயலி (Face Recognition App) ஆகியவை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

இந்த கணினிகள் சென்னையில் உள்ள 102 காவல் நிலையங்களில் ரோந்துகண்காணிப்பு பணியில் ஈடுபடும் போலீஸாருக்கு வழங்கப்பட உள்ளது.

இந்த கணினிகளை வழங்கும் விழா, சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பெருநகர காவல் துறை ஆணையர் சங்கர் ஜிவால், போலீஸாருக்கு கையடக்க கணினிகளை வழங்கி பேசினார்.

நிகழ்ச்சியில் கூடுதல் காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா, ஜெ.லோகநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

EVA STALIN

# சான்றிதழ்கள் பாதுகாப்புக்கு இ-பெட்டகம் கைப்பேசி செயலி




தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலகத்தில், மின் ஆளுமைக்கான மாநிலப் பயிற்சி மையம் மற்றும் தமிழ்நாட்டின் (பிளாக்செயின் பேக்போன்) நம்பிக்கை இணையதளத்தில் கைப்பேசி செயலியை செவ்வாய்க்கிழமை தொடங்கிவைத்த தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன். உடன் அத்துறை துணைச் செயலர் ஜெ.குமரகுருபன், முதன்மைச் செயலர் பிரவீன் பி.நாயர், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஆலோசகர் பி.டபிள்யூ.சி.டேவிடார் உள்ளிட்டோர்.

**சென்னை, ஜூன் 13:** கல்விச் சான்றிதழ், மதிப்பெண் பட்டியல்களை பொது மக்கள் பாதுகாப்பாக பகிர்வதற்கான இ-பெட்டகம் கைப்பேசி செயலி சேவை தொடங்கப்பட்டுள்ளது.

இந்த செயலியை தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்தார். சென்னையில் உள்ள தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த நிகழ்ச்சியில், புதிய செயலியின் சேவை தொடங்கப்பட்டது.

இணைய சேவை மையம் அளிக்கும் சான்றிதழ்கள், கல்விச் சான்றிதழ்கள், மதிப்பெண் பட்டியல்கள், உரிமங்கள், நிலப் பரிவர்த்தனை ஆவணங்கள் மற்றும் தரவுகளைப் பாதுகாக்க நம்பிக்கை இணையம் வழி செய்திடும். சான்றிதழ்களை சேதப்படுத்தாமல் பாதுகாக்க அரசாங்கத்துக்கு இந்த நம்பிக்கை இணையம் உதவி புரியும். இதே போன்று, பொது மக்களுக்கு உதவிடும் வகையில் இ-பெட்டகம் கைப்பேசி செயலி தொடங்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலி மூலமாக இணைய சேவை மையங்கள் வழங்கும் சான்றிதழ்கள், கல்விச் சான்றிதழ்கள், மதிப்பெண் பட்டியல்கள் ஆகியவற்றை சேமித்து வைத்து பொது மக்களே பாதுகாப்பாகப் பகிரலாம்.

இந்தச் சேவையால், மக்கள் தங்களது டிஜிட்டல் ஆவணங்களை வேலை வாய்ப்பு, உயர் கல்வி நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் பிற அலுவலர்களின் சரிபார்ப்புக்காக பாதுகாப்பான மற்றும் காகிதமில்லாத முறையில் பகிர முடியும். வேலை வாய்ப்பு, கல்வி சேர்க்கை, அரசு சேவைகளை அணுகுதல், வெளிநாடுகளுக்கு பயணம் செய்தல், பணிபுரிதல் போன்றவற்றுக்காக ஆவணங்களின் அசல் காகித நகல்களை நேரில் சென்று சமர்ப்பிப்பதற்கான தேவையை இது வெகுவாகக் குறைக்கும்.

**முதல் கட்டம்:** புதிய சேவையின் முதல் கட்டமாக ஜாதிச் சான்றிதழ், பிறப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், முதல் பட்டதாரிச் சான்றிதழ் உட்பட 24 வகையான சான்றிதழ்களை இ-பெட்டகம் கைப்பேசி செயலி பாதுகாக்கும். இந்தச் செயலி மூலம் மின்னஞ்சல், குறுஞ்செய்தி அல்லது பிற வழிகளில் ஆவணங்களைப் பாதுகாப்பாக பகிர விருப்பான வழியை குடிமக்களே தேர்வு செய்யலாம்.

புதிய செயலி தொடக்க நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலர் ஜெ.குமரகுருபரன், மின் ஆளுமை இயக்குநர் பிரவீன் பி.நாயர், இணை முதன்மைச் செயல் அலுவலர் பெ.ரமண சரஸ்வதி உட்பட பலர் பங்கேற்றனர்.

EVA STALIN IAS

# சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப கல்வித் துறையிடம் முன்அனுமதி பெற வேண்டும்

## உயர்நீதிமன்றம் உத்தரவு

**மதுரை, ஜூன் 13:** சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு கல்வித் துறையிடம் முன் அனுமதி பெற வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.



தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் புனித ஜோசப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியை ஜெயபிரபா. இவர் 2014-இல் இந்தப் பள்ளியில் ஆசிரியராக பணி நியமனம் செய்யப்பட்டார்.

இவரது நியமனத்தை அங்கீகரிக்கக் கோரி பள்ளி நிர்வாகம் சார்பில் பள்ளிக் கல்வித் துறைக்கு பரிந்துரைக்கப்பட்டதன் பேரில், 2017-இல் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், ஜெயபிரபா தனது பணி நியமனத்தை கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் அங்கீகரித்து, ஊதியப் பாக்கி, பணப் பலன்களை வழங்கக் கோரி வழக்குத் தொடுத்தார். அப்போது, அவரது பணி நியமனத்தை 2014-ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்க பள்ளிக் கல்வித் துறைக்கு தனி நீதிபதி உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து பள்ளிக் கல்வித் துறை சார்பில் தாக்கல் செய்த மேல்முறையீடு மனுவை இரு நீதிபதிகள் அமர்வு தள்ளுபடி செய்தது.

இந்த உத்தரவை மறுசீராய்வு செய்யக் கோரி பள்ளிக் கல்வித் துறையின் செயலர் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை திங்கள்கிழமை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், ஆர். தாரணி ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவு:

சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசு கருவூலம் மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது. இதுபோன்ற பணி நியமனங்கள் அந்தந்த மறைமாவட்டங்கள் பராமரித்து வரும் பதிவு மூப்புப் பட்டியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மறைமாவட்டங்களும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்துக்கு இணையாக பதிவேட்டை பராமரித்து வருகின்றன.

இந்தக் கல்வி நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றவர்கள் விவரங்களை ஆராய்ந்தால், அவர்கள் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாகவோ, அதே மதத்தில் உள்ள ஒரு பிரிவினராகவோ இருப்பர்.

கல்வித் துறை, உபரி ஆசிரியர் பிரச்னையைச் சந்தித்து வருகிறது. ஆனால், இதுபோன்ற கல்வி நிறுவனங்கள், தங்களது பள்ளியில் ஒரு காலியிடம் ஏற்பட்டால்கூட உடனடியாக நிரப்பி விடுகின்றனர். அவர்கள் மற்றொரு பள்ளியில் உபரி ஆசிரியர்கள் இருப்பதைக் கண்டுகொள்வதில்லை.

எனவே, வரும் காலங்களில் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள், கல்வித் துறையிடம் முன்அனுமதி பெற்றே ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டும். பணி நியமனத்துக்கு ஒப்புதல் அளிக்கக் கோரி சிறுபான்மை கல்வி நிறுவனம் அனுப்பும் பரிந்துரைகளை நீண்ட காலம் நிலுவையில் வைத்திருக்கக் கூடாது.

அதாவது, ஆசிரியர் நியமன ஒப்புதல் தொடர்பாக கல்வி நிறுவனங்களிடமிருந்து பரிந்துரை கிடைக்கப் பெற்றால், அதன் மீது 10 வாரங்களுக்குள் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

இந்த வழக்கில் தனி நீதிபதி உத்தரவிலும், அமர்வு உத்தரவிலும் தலையிட வேண்டியதில்லை. மறுசீராய்வு மனு முடித்துவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

# தமிழக தலைமைத் தகவல் ஆணையர் ஷகீல் அக்தர்

## 4 ஆணையர்களையும் நியமித்து அரசு உத்தரவு

**சென்னை, ஜூன் 13:** தமிழக தலைமைத் தகவல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி ஷகீல் அக்தர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், நான்கு தகவல் ஆணையர்களையும் நியமித்து அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக மனிதவள மேலாண்மைத் துறை செயலர் கே.நந்தகுமார் உத்தரவு பிறப்பித்துள்ளார்.



ஷகீல் அக்தர்

தமிழக தலைமைத் தகவல் ஆணையராக முகமது ஷகீல் அக்தர் நியமிக்கப்பட்டுள்ளார். பிகாரைச் சேர்ந்த அவர், 1989-ஆம் ஆண்டு தமிழகப் பிரிவு ஐ.பி.எஸ். அதிகாரியாக பணியில் சேர்ந்தார். பல்வேறு பொறுப்புகளை வகித்த அவர், கடந்த ஆண்டு அக்டோபரில் ஓய்வு பெற்றார். இந்த நிலையில், அவர் தலைமைத் தகவல் ஆணையர் பதவிக்கு விண்ணப்பம் செய்திருந்தார். அவரது தேர்வுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

**நான்கு தகவல் ஆணையர்கள்:** இதேபோன்று, காலியாக உள்ள நான்கு தகவல் ஆணையர்கள் பதவியிடங்களுக்கும் பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி பி.தாமரைக்கண்ணன், ஆர்.பிரியகுமார், கே.திருமலைமுத்து, பேராசிரியர் எம்.செல்வராஜ் ஆகியோர் தகவல் ஆணையர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த தாமரைக்கண்ணன், 1987-ஆம் ஆண்டு ஐ.பி.எஸ். பணியில் இணைந்தார். ஏடிஜிபி சட்டம்-ஒழுங்கு, சென்னை காவல் துறை போக்குவரத்து, நுண்ணறிவு கூடுதல் காவல் ஆணையர் உட்பட பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார். கடந்த ஆண்டு நவ. 30-ஆம் தேதி அரசுப் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்றார். மற்றொரு தகவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள ஆர்.பிரியகுமார் வழக்குரைஞர். அவர் உடன் பிறந்தவர்களில் ஒருவரான ஆர்.பிரதாப்குமார் ஏற்கெனவே தகவல் ஆணையராக இருந்து, வயது மூப்பு காரணமாக ஓய்வு பெற்றுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தகவல் ஆணையரான கே.திருமலைமுத்து, திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவிடம் தனி உதவியாளராக இருந்தவர். இதேபோன்று, தகவல் ஆணையராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் எம்.செல்வராஜ் சென்னையில் உள்ள குருநானக் கல்லூரியின் முதல்வராக இருந்தவர். அண்மையில் அவர் ஓய்வு பெற்றார். முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்பட பல்வேறு தலைவர்களிடம் தனிப்பட்ட முறையில் அன்பைப் பெற்றவர்.

**வெள்ளிக்கிழமை பதவியேற்பு:** தலைமைத் தகவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள ஷகீல் அக்தர் மற்றும் நான்கு தகவல் ஆணையர்கள் தங்களது பொறுப்புகளை வெள்ளிக்கிழமை ஏற்கவுள்ளனர். ஆளுநர் மாளிகையில் நடைபெறும் நிகழ்வில், அவர்களுக்கு பதவியேற்பு உறுதிமொழியை ஆளுநர் ஆர்.என்.ரவி செய்து வைக்கவுள்ளார். பதவியேற்கும் நாளில் இருந்து மூன்று ஆண்டுகள் அல்லது 65 வயது என இரண்டில் எது முதலில் வருகிறதோ அதுவரை பதவியில் இருப்பர்.

# குஜராத்தில் 'பிபர்ஜாய்' பெரும் சேதத்தை ஏற்படுத்த வாய்ப்பு

**புது தில்லி, ஜூன் 13:** 'பிபர்ஜாய்' புயல் குஜராத் மாநிலத்தின் கட்ச், தேவபூமி துவாரகா, ஜாம்நகர் மாவட்டங்களில் பெரும் சேதத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் செவ்வாய்க்கிழமை எச்சரித்தது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநிலத்தின் கடற்கரை மாவட்டங்களில் கடலோரம் வசித்துவந்த 30,000 பேர் அவர்களின் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு, அரசின் தற்காலிக தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மத்திய அரபிக் கடலில் கடந்த 6-ஆம் தேதி உருவான இந்தப் புயல், குஜராத்தின் மாண்டவி நகருக்கும் பாகிஸ்தானின் கராச்சி நகருக்கும் இடைப்பட்ட பகுதியில் வரும் வியாழக்கிழமை (ஜூன் 15) நண்பகலில் கரையைக் கடக்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

புயல் கரையை கடக்கும்போது குஜராத் மாநிலத்தின் கட்ச், தேவபூமி துவாரகா, போர்பந்தர், ஜாம்நகர், ராஜ்கோட், ஜூனாகர், மோர்பி மாவட்டங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதோடு, காற்றின் வேகம் மணிக்கு 125 முதல் 150 கி.மீ. வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மைய இயக்குநர் மிருத்யுஞ்ஜய் மொஹபத்ரா தில்லியில் செய்தியாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டி:

'பிபர்ஜாய்' புயலின் தாக்கம் கடுமையாக இருக்க வாய்ப்புள்ளது. புயல் காரணமாக கட்ச், தேவபூமி துவாரகா, ஜாம்நகர் மற்றும் போர்பந்தர் மாவட்டங்களில் சில பகுதிகளில் ஜூன் 15-ஆம் தேதி வரை 20 செ.மீ. மேல் அதிகன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இந்தப் பகுதிகளில் 25 செ.மீ. அளவுக்கு மழை பதிவானாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இதன் காரணமாக நகரின் தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

ராஜ்கோட், மோர்பி, ஜூனாகர் பகுதிகள் கன முதல் அதிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. இந்த மாவட்டங்கள் அனைத்திலும் ஜூன் 15-ஆம் தேதி வரை காற்றின் வேகம் மணிக்கு 145 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

புயல் காற்றுடன் மழையும் பெய்யும் என்பதால், பயிர்கள், வீடுகள், சாலைகள், மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு கம்பங்கள் உள்ளிட்டவை பலத்த சேதமடைவதற்கு வாய்ப்புள்ளது.

சௌராஷ்டிரா மற்றும் கட்ச் கடல் பகுதிகளில் கடல் அலைகள் 6 மீட்டர் உயரம் வரை எழ வாய்ப்புள்ளது. எனவே, இந்த கடற்கரை பகுதிகளை ஒட்டி வசிப்பவர்களை உடனடியாக அப்புறப்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**30,000 பேர் வெளியேற்றம்**

அரபிக் கடலின் வடகிழக்கு மற்றும் மத்தியக் கிழக்கை ஒட்டியப் பகுதிகளில் அலைகள் 10 முதல் 14 மீட்டர் உயரம் வரை எழ வாய்ப்புள்ளது. அதன் காரணமாக, கடல் பகுதியில் எண்ணெய் வள ஆய்வுப் பணிகள், கப்பல் போக்குவரத்து, மீன் பிடித்தல் உள்ளிட்ட செயல்பாடுகளை ஜூன் 15-ஆம் தேதி வரை தற்காலிகமாக நிறுத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உலகின் ஆசிய சிங்கங்களின் ஒரே வசிப்பிடமாக திகழும் கிர் தேசிய பூங்கா மற்றும் சோம்நாத் ஆலயம் உள்ளிட்ட பிற புகழ்பெற்ற தலங்களில் கண்காணிப்பை தீவிரப்படுத்தவும், புயல் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

**30,000 பேர் வெளியேற்றம்:** வானிலை ஆய்வு மைய எச்சரிக்கையைத் தொடர்ந்து, கடற்கரை மாவட்டங்களில் கடலோரம் வசித்துவந்த 30,000 பேர் அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடி புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் திங்கள்கிழமை ஆய்வு நடத்தினார். அப்போது, புயலால் அதிகம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும் செய்யப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து மாநில பேரிடர் நிவாரண ஆணையர் அலோக் குமார் பாண்டே அகமதாபாதில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறுகையில், 'புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றும் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன. இதுவரை, பல்வேறு மாவட்டங்களில் கடற்கரையோரம் வசித்துவந்த 21,000 பேர் வெளியேற்றப்பட்டு, அரசு சார்பில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. புயலால் அதிகம் பாதிக்கப்பட வாய்ப்புள்ள பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களும் வெளியேற்றப்பட்டுவிடுவர்' என்றார்.

**ஒருங்கிணைப்பு பணியில் 5 மத்திய அமைச்சர்கள்:** மாநில அரசுடன் இணைந்து புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக மன்சுக் மாண்டவியா, பர்ஷோத்தம் ரூபாலா, தர்ஷனா ஜர்தோஷ், தேவுசிங் சௌஹான், மஹேந்திர முஞ்ஜ்பாரா ஆகிய 5 மத்திய அமைச்சர்களை மத்திய அரசு ஈடுபடுத்தியுள்ளது. இவர்கள் குஜராத்தின் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு வருகின்றனர்.

மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா கூறுகையில், 'தேவையான உணவுப் பொருள்களுடன் தற்காலிக முகாம்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன. மருத்துவ அவசர நிலையை எதிர்கொள்வதற்கான திட்டமும் தயார்நிலையில் உள்ளது. துறைமுகங்களில் பணியாற்றிவந்த அனைத்து தொழிலாளர்களும் வெளியேற்றப்பட்டுவிட்டனர். கப்பல்கள் நங்கூரமிடப்பட்டுள்ளன. கப்பல் ஊழியர்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்' என்றார்.

# பெரும்பான்மை குடும்பங்களில் துன்புறுத்தப்படும் முதியவர்கள்



**ஆய்வில் தகவல்**

**புதுதில்லி,ஜூன் 13:** நாடு முழுவதும் 5,000 முதியவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவில், குடும்பங்களால் தாங்கள் துன்புறுத்தப்படுவதாகவும், அவமதிக்கப்படுவதாகவும் மூன்றில் இரண்டு பங்கு முதியவர்கள் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலக முதியோர் அவமதிப்பு விழிப்புணர்வு நாள் ஆண்டுதோறும் ஜூன் 15-ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி, ஏஜ்வெல் அறக்கட்டளை சார்பாக நாடு முழுவதும் ஆய்வு நடத்தப்பட்டது.

அந்த ஆய்வின் முடிவுகள் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 5000 முதியவர்களிடம் ஆய்வுக்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட முதியவர்களில் மூன்றில் இரண்டு பேர், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் பிறரால் அவர்கள் துன்புறுத்தப்படுவதாக அல்லது அவமானப்படுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆய்வில் பங்கேற்ற 77 சதவீத முதியவர்கள், தங்கள் உரிமைகள் பற்றி அறிந்திருக்கவில்லை. அதே போல், குடும்ப உறுப்பினர்களின் அன்பையும் ஆதரவையும் இழக்க நேரிடும் என்கிற அச்சத்தில் அவமதிப்புக்கு எதிராக அவர்கள் ஆட்சேபம் தெரிவிப்பதில்லை.

முதுமைக் காலத்தில் நிதி மற்றும் உளவியல் தேவைகளுக்காக மற்றவர்களைச் சார்ந்திருக்கும் வயதானவர்கள் அதிகம் துன்புறுத்தலுக்கு ஆளாகிறார்கள். இதில் வயதான பெண்கள் இன்னும் கூடுதலாக பாதிக்கப்படுகின்றனர்.

அவர்கள் எதிர்கொள்ளும் அவமதிப்புகளைப் பற்றி பேசினால் அது தேவையற்ற பதற்றம் மற்றும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் எனக் கருதி முதியவர்கள் அதைத் தவிர்த்து வருகின்றனர். முதுமையில் தாங்கள் தனிமைப்படுத்தப்படலாம் என்ற அச்சத்தில் துன்புறுத்தல், அவமதிப்புகளை எதிர்கொள்வதில் முதியவர்கள் சமரசம் செய்து கொள்கிறார்கள். குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காகவும் அவமதிப்புகளைக் கண்டுகொள்ளாமல் சில முதியவர்கள் தவிர்க்கின்றனர் என ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஆய்வு முடிவுகளை வெளியிட்டு பேசிய ஏஜ்வெல் அறக்கட்டளைத் தலைவர் ஹிமான்ஷு ரத் கூறுகையில், 'தொடர்ந்து அதிகரித்து வரும் முதியோர் மக்கள்தொகை விகிதம், பெருகி வரும் சிறு குடும்பங்கள் மோகம் மற்றும் விரிவடையும் தலைமுறை இடைவெளி ஆகியவற்றால் முதியோர் அவமதிப்பை எதிர்கொள்வது பெரும்பாலான வயதானவர்களுக்கு ஒரு பொதுவான நிகழ்வாகிவிட்டது.

முதியோர் அவமதிப்புக்கு எதிராக நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்ச்சியை நடத்துகிறோம்; ஆனால், சமூகத்தில் உள்ள முதியவர்களின் மனித உரிமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முறையாக எதுவும் செய்யவில்லை. சம்பந்தப்பட்ட அனைவரும் ஒன்றிணைந்து, நாளைய நன்மைக்காக இந்தப் பிரச்னையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது' என்றார்.